**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**STC .No. 1269-2022**

Deposition of RW3

| | | | |
|---|---|---|---|
| Name | : ரகு | Defence | : |
| Father/Husband Name | : கிருஷ்ணாராவ் | Court | : |
| Village | : சோழிங்கநல்லூர், சென்னை | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 38/2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 18.11.2025.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை:–**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து டிரைவர் வேலை செய்து வருகிறேன். நான் ரவிராஜன் என்பவரிடம் ஓட்டுநராக வேலை பார்த்து வருகிறேன். நான் டீசல் Allowance வாங்குவதற்காக கடந்த 08.06.2021 அன்று காலை 04.30 மணிக்கு ரவிராஜனுக்கு போன் செய்தேன். அவரது போன் Switch Off செய்யப்பட்டிருந்தது. நான் அவரது வீட்டிற்கு சென்று கதவை திறந்து பார்த்தபோது ரவிராஜனின் மாமா ஈழவளவன் ரவிராஜனின் தலைமுடியை பிடித்து அடித்துக்கொண்டிருந்தார். மற்றொரு நபர் ரவிராஜனின் கையை பின்னால் பிடித்துக்கொண்டிருந்தார். ரவிராஜனுக்கு முகத்தில் வீக்கமும், உதட்டின் ஓரத்தில் இருந்து ரத்தமும் வந்தது. அறிவழகன் என்பவர் ரவிராஜனின் வீட்டில் பொறுத்தப்பட்டிருந்த CCTV கேமராவை கழற்றிகொண்டிருந்தார். ஈழவளவன் என்னிடம் நீ யார் என்று கேட்டார். நான் ரவிராஜனின் டிரைவர் என்று கூறினேன். அவர் என்னை கீழே போ என விரட்டினார். நான் பயந்து கொண்டு கீழே வந்துவிட்டேன். பின்னர் 05.30 மணியளவில் ஈழவளவனும் அவருடன் வந்த நபர்களும் கீழே இறங்கி வந்தார்கள். அவர்கள் நீ என்னயா கேள்வி கேட்கிறாய், உன்ன என்ன செய்கிறேன் பார் என ரவிராஜனை மிரட்டி விட்டு சென்றார்கள். அவர்கள் சென்றவுடன் நான் ரவிராஜனிடம் சென்று ஏன் உங்களை உங்கள் மாமா அடித்தார் என கேட்டேன். அதற்கு ரவிராஜன் தனது திருமண செலவு கணக்குகளை ஈழவளவனிடம் கேட்டதால்

அவர் அடித்ததாக கூறினார். அவரை நான் மருத்துவமனைக்கு கூப்பிட்டேன். அவர் வேண்டாம் என கூறிவிட்டார். நான் அவரிடம் ஏர்போர்ட்டுக்கு சவாரி செல்ல வேண்டும் என்பதற்காக அவரிடம் டீசலுக்கு பணம் கேட்டேன். அவர் தன்னிடம் இல்லை என்றும், தனது காசோலை, பணம், பர்ஸ், போன், சிசிடிவி கேமரா அனைத்தையும் ஈழவளவன் எடுத்து சென்றுவிட்டதாக கூறினார்.

__புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை__

1. நான் எதிரியிடம் எவ்வளவு காலமாக டிரைவராக வேலை பார்த்து வருகிறேன் என்றால் கடந்த 2018 ஆண்டு முதல் டிரைவராக வேலை பார்த்து வருகிறேன். நான் வேலைக்கு சேர்ந்த சமயத்தில் ரவிராஜனிடம் எத்தனை டிரைவர்கள் வேலை பார்த்தார்கள் என்றால் 3 நபர்கள் வேலை பார்த்தார்கள். அன்றைய தினம் உடல் நிலை சரியில்லாததால் வீட்டிற்கு வந்து டீசலுக்கு பணம் வாங்கி செல்லும் படி போனில் கூறினார். அன்றைய தினம் யாரை ஏர்போர்டில் இருந்து அழைத்து வந்தேன் என்ற Trip Sheet உள்ளதா என்றால் தேடி பார்த்தால் தான் தெரியும்.

2. ரவிராஜனின் சொந்த ஊர் மயிலாடுதுறை ஆகும். ரவிராஜனின் பெற்றோர் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. என்னை சாட்சியம் அளிக்க யார் அழைத்துவந்தார் என்றால் ரவிராஜன் அழைத்து வந்தார். இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னாரா என்றால் காசோலைக்காக தாக்கல் செய்யப்பட்டதாக சொன்னார். புகார்தாரரின் சகோதரி எதிரியின் பெற்றெடுத்த தாய் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவம் பற்றி எதிரி சொல்லி தான் எனக்கு தெரியும் என்றாலும், அதனால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. அதனால் தான் எனக்கு எதிரியின் பெற்றோர் பெயரும் அவரின் சொந்த ஊரின் பெயரும் தெரியவில்லை என்றால் சரியல்ல. நான் எதிரியின் ஓட்டுநராக இருப்பதால் நான் அவர் சொல்லிக்கொடுத்ததன் அடிப்படையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.